## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 9/2018

நாள் 04.11.2025

PW1 – மீனாட்சி

க/பெ – சிவசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of November 2025)**

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்துக்கள் கருமாபாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் எனது தந்தைக்கும், பிரதிவாதியின் தந்தை அய்யாச்சாமிக்கும் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.எனது அப்பா மாரப்பன் 21.03.1996–ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதேபோல், பிரதிவாதியின் தந்தை அய்யாச்சாமி 16.02.1983–ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அதற்கு பிறகு இருவரும் 05.02.1996–ம் தேதியில் பதிவு பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் சொத்துக்களுக்கு இடையில் 13 சென்ட் இடம் தடத்திற்காக வேண்டி விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் எனது அப்பாவிற்கு வந்த பாக சொத்தை எனது பெயருக்கு 07.06.2004–ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அந்த 13 சென்ட் பொதுத்தடத்திற்கு வடபுறமாக தான் எங்களுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்திற்கு தென்புறமாக பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய சொத்துக்களை ஒட்டி வேட்டுவபாளையம் கிராம சொத்து ஆரம்பித்து விடுகிறது என்றால் சரிதான். அந்த வேட்டுவபாளையம் கிராமத்தில் உள்ள தொழில்பேட்டை அமைந்துள்ள இடத்தில் எனக்கு

இரண்டு மனைகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 7,8 ஆண்டுகளுக்கு முன்பாகவே பிரதிவாதியின் தந்தை அய்யாச்சாமி அவருடைய பாக சொத்தில் ஒரு பகுதியை 13 சென்ட் தடத்தை ஒட்டினார்போல் தென்புறத்தில் 6 மனைகளாக விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். கிரையம் பெற்ற அந்த 6 நபர்கள் நான் வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாகவே வீடுகள் கட்டி விட்டார்கள் என்றால் சின்ன, சின்ன வீடுகளாக கட்டியிருந்தார்கள். பிரதிவாதி வெங்கடாசலம் அவரது வீட்டிற்கு 13 சென்ட் வழியாக சென்று அவரது மீதி பாகத்திற்கு செல்வதற்கு தடம் மட்டுமே அமைந்துள்ளது என்றால் சரிதான்.

2. நான் வழக்கு போடும் போது பிரதிவாதி வெங்கடாசலம் மட்டும் தான் அந்த 13 சென்ட் தடத்தில் 5 அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவரது அப்பாவிடம் கிரையம் பெற்ற 2 முதல் 7 பிரதிவாதிகள் அந்த தடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக நான் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. அதனால், 1–ம் பிரதிவாதி வெங்கடாசலம் அந்த பொது தடத்தில் எந்தவொரு ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும், அதனால் இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே எழவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் வந்து அளவீடு செய்தார் என்றால் சரிதான். அந்த ஆணையரின் அறிக்கையில் 1–ம் பிரதிவாதி பொதுதடத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், நான் தான் அந்த தடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கம்பி வேலி அமைத்துள்ளேன் என்றும், 2 முதல் 7 பிரதிவாதிகள் தடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்களை கட்டியுள்ளார்கள் என்றும், அதனால் 1–ம் பிரதிவாதி மீது நாங்கள் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

எனக்கும், 1—ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுதடத்தின் வழியாக வேட்டுவபாளையம் செல்லும் நபர்களுக்கு நான் அனுமதி கொடுப்பதாக சொன்னேன் என்றும், அதை 1—ம் பிரதிவாதி ஆட்சேபித்ததால் தான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தூண்டுதலின் பேரில் வேட்டுவபாளையம் பொதுமக்கள் அந்த தடத்தின் வழியாக செல்ல வேண்டும் என்று வருவாய் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அவரும் தடத்தை விடுமாறு கேட்டுக்கொண்டதால் 1—ம் பிரதிவாதி வட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் மீது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண்.33511/2017 என்ற மனுவை தாக்கல் செய்து அந்த தடம் பட்டா நிலம் என்பதால் அதில் இடையூறு செய்யக்கூடாது என்று உத்தரவு பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. அதனால், நான் 1—ம் பிரதிவாதியை துன்புறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் 1—ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :—** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.04 14:08:50 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**